**கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திருமதி.கே.பி.மகேஸ்வரி.எம்.ஏ.,பி.எட்.,**

**ந.க.எண் 1482/ஆ1/2022 நாள்:19/04/2022.**

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை - பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக தற்காலிக அடிப்படையில் மாறுதல் மூலம் நியமனம் பெற்று கிருஷ்ணகிரி மாவட்டம், கூரம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.சு.காந்தி. என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் தொடர்பாக.

பார்வை 1.கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க எண் 5086/ஆ1/ 2020 நாள். 10.11.2021.

2.கூரம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளித்தலைமையாசிரியரின் கடித ந.க எண் 04/2021-2022 நாள்:08.03.2022.

=@@@@@=

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், கூரம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.சு.காந்தி என்பார், பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பார்வை 1 ல் காண் செயல்முறைகள் வாயிலாக தற்காலிக அடிப்படையில் மாறுதல் மூலம் நியமனம் (Recruitment by transfer) பெற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், கூரம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளியில் 10-11-2021 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 14 ன் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் மாறுதல் மூலம் நியமனம் பெற்ற கீழ்காண் பணியாளருக்கு மேற்படி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை 2 ல் காண் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட கருத்துருவினை பரிசீலனை செய்து, கீழ்கண்டவாறு அவரின் பெயருக்கு எதிரே கலம் 3 ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர், பதவி மற்றும் பணிப்புரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| திரு.சு.காந்தி.<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>கூரம்பட்டி.<br>கிருஷ்ணகிரி மாவட்டம். | 10.11.2021 பிற்பகல் | 10.11.2021 பிற்பகல் |

இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவா... ாகர்

அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

இந்த பணிவரன்முறை ஆணை குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்/ தலைமையாசிரியர் அன்னாரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்
கிருஷ்ணகிரி

பெறுதல்
திரு.சு.காந்தி,
இளநிலை உதவியாளர்
அரசு உயர்நிலைப் பள்ளி, கூரம்பட்டி,
கிருஷ்ணகிரி மாவட்டம். (உரிய வழியாக)

நகல்: தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, கூரம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்.